1975 ஏப்ரல் 3] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

தண்ணீர் பற்றுக்குறைக் கிராமங்களுக்கு குடிநீர் திட்டங்கள் அமுல்படுத்த ஊர்ப்பணித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளிக்கப்படுகிறது. ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1974-75-ல் ஆண்டிற்கு ரூ. 46,920 ஊர்ப்பணித் திட்டத்தின் கிழ் அளிக்கப்பட்டுள்ளன. ஊர்ப்பணித் திட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள வேலைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது :—

(1) அந்தந்தப் பகுதிகளின் நிலைமைக்கேற்ப விரிவான வழங்குதல் இல்லாத தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் கட்டுதல்.

(2) குழாய்கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல்.

ஒட்டப்பிடாரம் துணைத்தாலுக்காவில் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, அப்பகுதி மக்களுக்கு லாரி மூலம் தண்ணீர் வசதி செய்து தருவது இப்போது தேவையற்றதாகும்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்வதையெல்லாம் நான் ஒத்துக் கொள்கிறேன். அது வாஸ்தவம்தான். ஆனால் அந்த ஏரியாவிலே மழையில்லாத காரணத்தால் 4 நாள், 3 நாள் கழிந்தவுடன் உப்புத் தண்ணீராக ஆகிவிடுகிறது. அந்தத் தண்ணீரைக் கூடக் கொண்டு வந்திருக்கிறேன். பேரவைத் தலைவரின் அனுமதியிருந்தால் அதைக் கொண்டுவந்து அறையிலே காட்டுகிறேன். அந்தத் தண்ணீரை குடித்தால் அந்த வட்டாரத்து மக்களுக்கு வியாதிகள் உண்டாகும். அந்தத் தண்ணீரை டெஸ்ட்டுக்கு வேண்டுமானால் அனுப்பலாம். நீங்கள் அதற்கு ஒன்றும் செய்ய வில்லை என்றால் சொல்லிவிடுங்கள். ஆனால் அங்கே நல்ல தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு அந்த வட்டாரத்திற்கு எவ்வளவோ நன்மைகள் செய்கிறது என்று சொல்வேன். எனவே, இந்தத் தண்ணீர் விஷயத்தில், ஒட்டப்பிடாரத்தில் நல்ல தண்ணீர் இருக்கிறது. இதற்கு அந்தச் செலவுகூட ஆகாது, எனவே ஒரு லாரியை

வைத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் தண்ணீர் சப்ளை செய்தால் ஒன்றும் கெட்டுவிடாது. அந்த வட்டார மக்கள் உங்களைப் பாராட்டுவார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்கள் குடிக்கத் தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, ஒட்டப்பிடாரம் பகுதியில் 106 வேலைகளுக்கு, குடிதண்ணீர் வேலைகளுக்கு 2.79 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒட்டப்பிடாரம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் 31 ஆழ்நுளைக் கிணறுகளுக்கு, ஒவ்வொன்றுக்கும் சுமார் 9,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்து போடப்படுகிறது. தளவாய்புரம் என்ற ஓரேயொரு இடத்தில்தான் உப்புத் தண்ணீர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்குள்ளவர்கள் பக்கத்துக் கிராமத்திலிருந்து குடி தண்ணீர் எடுத்து வருகிறார்கள்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, அந்தப் பகுதி மக்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் குடித்தால் வியாதி பரவும் நிலை இருக்கிறது. இதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா? எடுக்கப்படாது என்றால் விட்டு விடுங்கள். இதோ பெட்டிஷன் எல்லாம்கூட இருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்ணீர் கொடுக்க வறட்சி நிவாரணத்தில் பல வேலைகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன.

(6) அறிக்கை அளித்தல்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை குறித்து மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை குறித்த அறிக்கை.

THIRU THOPPUR THIRUVENGADAM: Sir, I rise to present the report of the Committee on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Employment and Training.

(7) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(8) தகவல் கோரல்.

அறிவிக்கை கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் படுவது குறித்து.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, ஒரு பிரச்னை. சட்டமன்றத்தில் விதிமுறைகளுக்கு உரிய மரியாதை கொடுத்து ஒரு பிரச்னை சம்பந்தமாகத் தங்கள் அறையிலே தனியாகக் கேட்கிறேன். 42-வது விதியின்கீழ் கொடுத்த ஒரு தீர்மானம் தள்ளப்பட்டது. இன்னொரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தைப்பற்றியும் கொடுத்திருக்கிறேன். அதற்கு உரிய அமைச்சரவர்களும் பேரவையில் இருக்கிறார்கள். ஆனால் அது எடுக்கப்படவில்லை. தொகுதி மக்களால் ஓட்டு போடப் பட்டு, எம்.எல்.ஏ. என்ற முறையில் படியும் வாங்குகிறோம். இந்தப் பேரவையிலே உட்கார்ந்து கொண்டு. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் அறையிலேதான் கேட்க வேண்டும். இதே கருத்தை சீனிவாசன் அவர்கள் இந்த இடத்திலே உட்கார்ந்திருந்தாலும், இவற்றையெல்லாம் இங்கே கேட்கக் கூடாது, அறையிலேதான் கேட்க வேண்டுமென்று சொல்லியிருப்பார்கள்.

திரு. பெ. சீனிவாசன்: ஏதாவது ஒரு காரணம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரி, எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்.

(9). 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண். 15—காவல் துறை.

(ஆ) நிதிக்கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்— தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலேயே ஒன்றைச் சொல்லி விடுகிறேன். இப்பொழுது இரண்டே முக்கால் மணி நேரத்திற்கும் குறைவாகத்தான் நமக்கு நேரமிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு ஒரு மணி நேரம் கொடுக்க வேண்டும். மீதியிருப்பது ஒன்றேமுக்கால் மணி நேரம்தான். 15 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒன்று, ஐந்து நிமிடங்களில் உறுப்பினர்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நேற்று பேசிய கட்சிகளைத் தவிர்த்து நேற்று பேசாத கட்சிகள் மட்டும் இன்றைக்குப் பேச வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நேரம் ஒதுக்குவதிலே எங்கள் கட்சிக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று தாங்கள் தயவுசெய்து சொல்ல வேண்டும். நாங்கள் இரண்டாவது கட்சியாக இருக்கின்றோம், எங்கள் கட்சியின் சார்பாக திரு. கோபால் அவர்கள்தான் கொஞ்சநேரம் பேசியிருக்கிறார்கள். நானும் பேசவேண்டும். 5 நிமிடங்களில் பேசுவது என்றால் எங்களைப் போன்றவர்களால் 5 நிமிடங்களில் பேசுவது கஷ்டமாக இருக்கும். ஆகவே, 5 நிமிடங்களில் பேச விரும்பவில்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு வழி என்ன?